Stadt Chur

# Deutsch für die Schule

## பாலர்பாடசாலைக்குச் செல்ல ஒரு வருடத்துக்கு முன்னரே டொச்மொழியைக் கற்றுக்கொள்வது

---

## பெற்றோர்களுக்கான தகவல்கள்

Januar 2018

Unterstützt durch die Integrationsförderung des Kantons Graubünden und den Integrationskredit des Bundes (SEM)

ஒரு பிள்ளை ஐந்து வயதையடைந்து பாலர்பாடசாலைக்குச் செல்லும்போது டொச்மொழியை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். பிள்ளைக்குப் போதுமானளவு டொச்மொழியறிவு இல்லையெனில் முன்னராகவே மொழியைக் கற்பிப்பதற்காக மாநிலம் செயற்திட்டம் ஒன்றை நடாத்துகிறது. பிள்ளைகளைப் பாலர்பாடசாலை ஆரம்பமாக ஒரு வருடத்திற்கு முன்னராகவே ஒரு வாரத்தில் இரு அரை நாட்கள் டொச்மொழி பேசும் இடங்களில் அதாவது டொச்மொழிபேசும் பிள்ளைகளுடன் ஒன்றாகச் சேர்த்துப் பராமரிக்கப்படவேண்டும். பெற்றோர்கள் பெற்றோர்பயிற்சி வகுப்பிற்குச் செல்லும் அதேசமயம் மொழிப்பயிற்சிக் காலங்களில் தமது பிள்ளைகளுக்கு உதவியளிப்பர். பிள்ளைகளுக்கு அதனாலான பயன்கள், பெற்றோர் என்ன செய்ய வேண்டும், எவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும்? என்பன பற்றிய கண்ணோட்டம்.

### எதற்காகப் பாலர்பாடசாலைக்குச் செல்ல முன்னரே டொச்மொழியைக் கற்கவேண்டும்?

பாடசாலையில் திறமையாகவிருக்க வேண்டுமெனில் டொச்மொழியறிவு மிகமுக்கியமானது. பாலர்பாடசாலைக்குச் சமூகமளிக்க ஆரம்பிக்கும்போது பிள்ளைகளுக்கு டொச்மொழியறிவு இல்லாவிடின் அல்லது போதாமல் இருப்பின் மறு டொச்மொழிபேசக் கூடியபிள்ளைகள் போன்று பாடசாலை ஆரம்பத்திற்குரிய தகைமைகள் நன்றாக அமையாது. பிள்ளை கல்வி மொழியான டொச்சைப் பயிலப் பலவருடங்கள் தேவைப்படும். அநேகமாகப் பாடசாலைக் கல்வியிற் சிரமப்படுவர். இக்காரணத்தினாற்தான் பாலர்பாடசாலைக்கு முன்னராகவே டொச்மொழியைக் கற்கக் கூடியதாகவிருப்பது முக்கியமாகும்.

கூர்-மாநிலப்பாடசாலைகள் கடந்தகாலங்களில் 20 வீதத்திற்கு மேலான பிள்ளைகளுக்குப் பாலர்பாடசாலைக்குச் செல்ல ஆரம்பிக்கும்போது போதுமானளவு டொச்மொழியறிவு இல்லையென்பதை அனுபவரீதியாகக் கண்டுள்ளன. ஆகையால் கூர்மாநிலப்பாடசாலைச் சட்டம்(பிரிவு 39) பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் முக்கியம் என்பதைவலியுறுத்தி, பிள்ளைகளைப் பிரத்தியேகமாகப் பயிற்றுவிப்பதற்குச் சாத்தியமளிக்கிறது. கூர்-கெமைண்டை உறுப்பினர் 08.05.2014 அன்று நடைபெற்ற கூட்டத்தில் „Deutsch für die Schule“ எனும் செயற்திட்டத்தை அமுலாக்குவதென முடிவு செய்யப்பட்டது.

### சிறுபிள்ளைகள் டொச்மொழியை எப்படிக்கற்றுக் கொள்வர்?

சிறுபிள்ளைகள் நாளாந்த வாழ்வு நடைமுறைகளில் தம்முடன் தொடர்புடைய பெரியவர்களிடமும், சகவயதினரிடமும் மொழியைக் கற்றுக் கொள்வர். விளையாட்டகம் (Spielgruppen), பகற்பராமரிப்பகம் (Kinderkrippen), மற்றும் பராமரிப்புக்குடும்பங்கள (Tagesfamilien)

போன்றவற்றிற் பணிபுரியும் பலநெறியாளர்கள் பிரத்தியேகபயிற்சி பெற்றிருப்பதால் பிள்ளைகளுக்குத் தகுந்த முறையில் விளையாட்டு மூலம் மொழிஊக்குவிப்புப் பயிற்சியை வழங்குவர்.

இது போன்ற இடங்களுக்குச் செல்லும்போது டொச்மொழிபயிலுதல் மட்டுமன்றிப் பிள்ளைகள் ஒன்று சேர்ந்து விளையாட, ஒருகுழுவாக இணைந்து தொழிற்படும் தன்மையுண்டாக, தனித்துவவிருத்தி மற்றும் தன்னிச்சையாகத் தொழிற்படும் திறமை போன்றவற்றிற்குப் பயனளிக்கும். பிள்ளைகளுக்கு ஒருங்கமைந்த பயிற்சியே முக்கியமெனக் கருதப்படுகிறது.

### எனது பிள்ளைக்குப் போதுமானளவு டொச்மொழியறிவுண்டா என்பதை எப்படி முடிவு செய்வது?

பாசல்பல்கலைக்கழக அறிஞர்கள் ஆய்வின் அடிப்படையில் வினாக்கொத்தொன்றைத் தயாரித்துள்ளார்கள்.

பெற்றோர்களாகிய நீங்கள் டொச்மொழி பேசத்தெரியாதவர்களாக இருப்பினும் பிள்ளையின் டொச்மொழியறிவை வினாக்கொத்தின் உதவியுடன் சரியாக நிர்ணயிக்கலாம். பல மொழிகளில் இவ்வினாக்கொத்து உள்ளது. தைமாதத்தில் அதாவது பாலர்பாடசாலைக்குச் சமூகமளிக்க ஒன்றரை வருடங்களுக்கு முன்னராக அப்பிள்ளைகளின் சகல பெற்றோருக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

கூர்மாநிலத்தில் 2014ஆம் ஆண்டு பிறந்த பிள்ளைகளின் சகல பெற்றோர்களும் இவ்வினாக்கொத்தை நேர்மையான முறையில் நிரப்பி 05.02.2018க்கு முன்னராகத்திருப்பி அனுப்புவது கட்டாயமானதாகும்.

இந்த வினாக்கொத்தின் விடைகள் பாசல்பல்கலைக்கழகத்தினால் மதிப்பீடு செய்யப்படும். சகல பெற்றோருக்கும் பங்குனிமாதத்தில் முடிவுகள் பற்றியும் தொடர்ந்து செய்ய வேண்டியவை பற்றியும் கூர்மாநிலச் சமூகநலச்சேவைப்பிரிவினர் எழுத்துமூலம் அறியத்தருவர். பாலர்பாடசாலையை உற்று நோக்கும் போது மதிப்பீட்டின்படி பிள்ளைக்கு டொச்மொழியறிவு போதாது எனமுடிவு வருமாயின் „Deutsch für die Schule“ எனும் செயற்திட்டத்திற் பங்குகொள்ளவேண்டும் எனச்சிபாரிசு செய்யப்படும்.

**சிபாரிசும் செய்ய வேண்டியவையும் ?**

ஒரு பிள்ளையை டொச்மொழிகற்க வேண்டுமெனச் சிபாரிசு செய்யப்படின் பெற்றோர்கள் அதுசம்பந்தமான இடங்களிற் பொருத்தமான இடத்தைத் தேடவேண்டும். அநேகமான பெற்றோர் தமது பிள்ளைகளை விளையாட்டகத்திற்கு (Spielgruppen) அனுப்புவதையே அனுபவத்திற் கண்டுள்ளோம். ஆனாற் பகற்பராமரிப்பகம் (Kinderkrippen) , மற்றும் பராமரிப்புக் குடும்பங்கள் (Tagesfamilien) போன்றவற்றிலும் சாத்தியமுண்டு. „Deutsch für die Schule“ எனும் செயற்திட்டப் பொறுப்பாளர் பெற்றோருக்கு இடங்களைப் பெற்றுக் கொடுப்பதில் அனுசரணை வழங்குவர்.

பெற்றோர் இடத்தைத் தேடியெடுத்தபின் அவ்விடத்தின் தலைமையுடன் சேர்ந்து அதற்குரிய அத்தாட்சியை நிரப்பி இத்திட்டப் பொறுப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**எனது பிள்ளை எத்தனை தடவைகள் சமூகமளிக்கவேண்டும்?**

பிள்ளைகள் பாலர்பாடசாலைக்குச் செல்ல ஒரு வருடங்களுக்கு முன்னராக வாரத்தில் இரு அரை நாட்கள் டொச்மொழிப்பயிற்சிக்குச் செல்ல வேண்டுமெனச் செயற்திட்டம் வலியுறுத்துகிறது. விளையாட்டகத்தில் ஒரு அரைநாள் என்பது குறைந்தது மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாகும். ஒழுங்காகச் சமூகமளிப்பது கட்டாயமானது. கூர்மாநிலத்தின் பாடசாலை விடுமுறைகள் இங்கும் உள்ளன. பராமரிப்பு இடங்கள் செயற்திட்டப் பொறுப்பாளரிற்குப் பிள்ளை ஒழுங்காகச் சமூகமளிக்கவில்லை அல்லது கட்டணம் செலுத்தப்படவில்லையென அறிவிக்குமாயின் பெற்றோர்கள் அதற்குத் தகுந்த விளக்கமளிக்க வேண்டும்.

**பேற்றோர் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?**

பிள்ளை இச்செயற்திட்டத்திற்கமைய வாரத்தில் இருதடவைகள் விளையாட்டகம் (Spielgruppen), பகற்பராமரிப்பகம் (Kinderkrippen) , மற்றும் பராமரிப்புக்குடும்பங்கள் (Tagesfamilien) போன்றவற்றில் ஒன்றிற்குச் சமூகமளிக்குமாயின் கூர்மாநிலம் கட்டணக்குறைப்பு விதி அடிப்படையில் கட்டணத்தின் ஒரு பகுதியைப் பொறுப்பேற்கும். அதாவது வருமானவரிக் கணிப்பீட்டுக்கான வருமானம் மற்றும் சொத்துக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பட்டியலிடப்பட்டு அதில் 20 தொடக்கம் 80 வீதத்திற்குள் அடங்கும்.

மாநிலத்தின் இக்கட்டணக் குறைப்பிற்காகப் பராமரிப்பு நிலையங்கள் சமூகநலச்சேவைப்பிரிவுடன் ஒரு உடன்பாட்டை வைத்திருப்பது அவசியமாகும். மேலதிக மணித்தியாலங்கள் அல்லது அரை நாட்களுக்குக்கான கட்டணத்தைப் பெற்றோரே சுயமாகக் பொறுப்பேற்கவேண்டும்.

**பெற்றோர்களுக்கான பயிற்சி என்றால் என்ன?**

„Deutsch für die Schule“ எனும் செயற்திட்டத்திற் பங்கு கொள்ளும் பிள்ளைகளின் பெற்றோர் கல்வியாண்டு 2018 / 2019 இல் எட்டுத்தடவைகள் பெற்றோர்பயிற்சி நிகழ்வுகளிற்குச் சமூகமளிக்கக் கடமைப்பட்டுள்ளனர். இந்நிகழ்வுகளில் பெற்றோர் பிள்ளைகளுக்கு மொழிவிருத்திக்கு உதவுவது பற்றியும், கல்வித்திட்டங்கள் பற்றிய விளக்கங்களையும், மற்றும் பல பயன்பாடான தகவல்கள் வழங்கியும் உதவுவர். பெற்றோர்பயிற்சி நிகழ்வானது தொழில்புரியும் மற்றும் டொச்மொழி தெரியாத பெற்றோர்களும் பங்குகொள்ளக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. பெற்றோருக்கான இப்பயிற்சிச்சலுகை இலவசமானது.


**செயற்திட்டப் பொறுப்பாளர் / Programmleitung „Deutsch für die Schule“:**

Bettina Joos Lopez
Kornplatz 12, 7000 Chur
தொலைபேசி / Telefon 081 254 46 24
மின்னஞ்சல் / E-Mail deutschfuerdieschule@chur.ch

**தபால்முகவரி /Postanschrift:**

Deutsch für die Schule, Kornplatz 12, Postfach 810, 7001 Chur

www.integration-chur.ch